Australian Government
Department of Agriculture, Water and the Environment

# தயாரிப்புப் புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் (Product Emissions Standards Act) 2017-ன்கீழ் ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கான வழிகாட்டி



© காமன்வெல்த் ஆஃப் ஆஸ்திரேலியா 2020

**அறிவுசார் சொத்துரிமைகளின் உரிமைத்துவம்**
வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலன்றி, இந்த வெளியீட்டில் உள்ள நகலுரிமை (மற்றும் வேறு எந்த அறிவுசார் சொத்துரிமைகளும்) காமன்வெல்த் ஆஃப் ஆஸ்திரேலியாவிற்கு (காமன்வெல்த் எனக் குறிப்பிடப்படுகிறது) உரியது.

கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம்
மூன்றாம் தரப்பினால் கொடுக்கப்பட்ட உள்ளடக்கம், லோகோக்கள் மற்றும் காமன்வெல்த் கோட் ஆஃப் ஆர்ம்ஸ் தவிர்த்து இந்த வெளியீட்டில் உள்ள அனைத்துப் பொருள்களும் கிரியேட்டிவ் காமன்ஸ் ஆட்ரிபியூஷன் 4.0 சர்வதேச உரிமத்தின்கீழ் உரிமம் கொடுக்கப்பட்டது.

உரிமம் பற்றிய விசாரனைகளுக்கும், இந்த ஆவணத்தைப் பயன்படுத்துவதற்கும் copyright@awe.gov.au-க்கு மின்னஞ்சல் செய்ய வேண்டும்.

தரவைப் பட்டியலிடுதல்
இந்த வெளியீடு (மற்றும் அதிலிருந்து தயாரிக்கப்பட்ட எந்த ஒரு வெளியீடும்) கீழ்க்காண்பது போன்று குறிப்பிடப்பட வேண்டும்: விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை 2020, தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் (Product Emissions Standards Act) 2017-ன்கீழ் ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கான வழிகாட்டி, கான்பரா, மார்ச். CC BY 4.0.

ISBN 978-1-76003-287-6

இந்த வெளியீடு **environment.gov.au/protection/emissions-standards**-ல் கிடைக்கும்

விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை
GPO பாக்ஸ் 858 கான்பரா ACT 26011
தொலைபேசி 1800 803 772
வலைதளம் awe.gov.au

விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை வழியாகச் செயல்படும் ஆஸ்திரேலிய அரசு இந்த வெளியீட்டில் உள்ள தகவல்களையும் தரவையும் தயாரிப்பதிலும் ஒருங்கிணைப்பதிலும் போதுமான கவனம் செலுத்தியிருக்கிறது. எனினும், விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறை , அதன் ஊழியர்கள் மற்றும் ஆலோசகர்கள் கவனமின்மைக்கான கடப்பாடு, மற்றும் எந்த ஒரு இழப்பு, சேதம், காயம், செலவு அல்லது எந்த இந்த வெளியீட்டில் உள்ள எந்த ஒரு தகவலையும் அல்லது தரவையும் பார்த்து, பயன்படுத்தி அல்லது நம்பிய காரணத்தினால் எந்த ஒரு நபருக்கும் ஏற்பட்ட செலவு உட்பட்ட அனைத்துக் கடப்பாடுகளிலும் சட்டத்தால் அனுமதிக்கப்படும் அளவுக்கு உரிமையைத் துறக்கிறார்கள்.

# உள்ளடக்கம்


**1. அறிமுகம் 4**

ஆஸ்திரேலிய சான்றளிப்புக்குத் தேவையானவை 4

செயல்முறை 5

**2. ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்தல் 6**

விண்ணப்பதாரரிடமிருந்து தேவைப்படும் தகவல்கள் 7

விண்ணப்பக் கட்டணங்கள் 7

திருப்பிச் செலுத்துதல் 7

விண்ணப்பக் கட்டணத்தைத் தளர்த்துவதற்கான கோரிக்கை 7

ஒரு விண்ணப்பத்தை மதிப்பிடுவதற்கான கால அளவு 8

**3. சான்றளிக்கப்பட்டால் 9**

ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பினை மாற்றுதல், இடைநிறுத்துதல் அல்லது இரத்துசெய்தல் 9

**4. சான்றிளிப்பு வழங்கப்படாவிட்டால் 10**

ஒரு முடிவின்மீது மேல்முறையீடு 10

**5. துறையின் பங்கு 10**

**6. அதிகமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமா 11**

# 1. அறிமுகம்

1 ஜூலை 2018 முதல், ஆஸ்திரேலியாவுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட, அல்லது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மற்றும் ஆஸ்திரேலியாவில் வழங்கப்பட்ட 19 கிலோவாட் அல்லது குறைவான மின்சக்திகொண்ட அனைத்து புதிய ஸ்பார்க் இக்னிஷன் சாலையில் ஓடாத எந்திரங்களும் புதிய ஸ்பார்க்-இக்னிஷன் உந்த கடல்சார் எந்திரங்களும் தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்கள் சட்டம் *(Product Emissions Standards Act) 2017*-ன்கீழ் குறிப்பிடப்பட்ட தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்களுக்குக் கட்டுப்பட்டவையாக இருக்க வேண்டும். உள்நாட்டுத் தயாரிப்பு என்பது தயாரிப்புகளுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட எந்திரங்களின் அசெம்பிளியை உள்ளடக்காது.

1 ஜூலை 2020 முதல் ஆஸ்திரேலிய சந்தைக்கு வழங்கப்பட்ட அனைத்துத் தயாரிப்புகளும் இந்தச் சட்டத்திற்கு கட்டுப்பட்டிருக்க வேண்டும். இந்த தேதியிலிருந்து, ஆஸ்திரேலியாவிற்குள் இறக்குமதி செய்யப்பட்ட ஐரோப்பிய சான்று பெற்ற சாலையில் ஓடாத தயாரிப்புகள் யூரோ ஸ்டேஜ் V உமிழ்வுத் தரங்களுக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

யூரோ ஸ்டேஜ் II உமிழ்வுத் தரங்களின்படி சான்றுபெற்ற சாலையில் ஓடாத தயாரிப்புகள் வரும் 30 ஜூன் 2021-வரை ஆஸ்திரேலியாவிற்கு தொடர்ந்து வழங்கப்படலாம், அதற்குப் பிறகு, யூரோ ஸ்டேஜ் V உமிழ்வுத் தரங்களின்படி சான்று பெற்ற தயாரிப்புகளை மட்டுமே வழங்க முடியும்.

ஆஸ்திரேலிய சான்றளிப்புக்காக விவசாயம், தண்ணீர் மற்றும் சுற்றுச்சூழல் துறைக்கு விண்ணப்பம் செய்யக் கருதும் யாருக்கும் இந்த வழிகாட்டி தகவல்களை வழங்குகிறது. சில சூழல்களில், தயாரிப்புப் புகை உமிழ்வுச் செந்தரங்கள் விதிகள் (Product Emissions Standards Act) 2017-ன் பாகம் 5-ன்கீழ் தயாரிப்புகள் செந்தரங்களிலிருந்து விதிவிலக்குக்குத் தகுதி பெறலாம். சட்டத்தின்கீழ் விதிவிலக்குகளுக்கான தனியான வழிகாட்டுதல்களைப் பார்க்கவும்.

## ஆஸ்திரேலிய சான்றளிப்புக்குத் தேவையானவை

சட்டம் மற்றும் விதிகளின்கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தாலன்றி ஆஸ்திரேலிய சந்தையில் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட புதிய ஸ்பார்க்-இக்னிஷன் சாலையில் ஓடாத எந்திரங்கள் மற்றும் உந்த கடல்சார் எந்திரங்கள் சான்றிளிக்கப்பட வேண்டும்.

அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை (United States Environmental Protection Agency), கலிபோர்னிய ஏர் ரிசோர்சஸ் போர்டு (California Air Resources Board), சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் (Environment and Climate Change) கனடா, அல்லது ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளினால் தங்களுடைய உரிய அதிகாரவரம்புக்குள் புகை உமிழ்வுச் செந்தரங்களைப் பூர்த்தி செய்வதாகச் சான்றளிக்கப்பட்ட தயாரிப்புகள் ஆஸ்திரேலியச் செந்தரங்களைப் பூர்த்த செய்வதாகக் கருதப்படும்.

ஸ்பார்க்-இக்னிஷன் சாலையில் ஓடாத எந்திரம் அல்லது புரொப்பல்ஷன் கடல்சார் எந்திரம் ஒரு அங்கீகரிக்கப்படாத அதிகார எல்லையில் ஏற்கனவே சான்றளிக்கப்பட்டிருந்தால் ஆஸ்திரேலிய சான்றளிப்புக்காக துறையிடம் ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கான விண்ணப்பங்களில் ஆய்வக புகை உமிழ்வுச் சோதனை முடிவு அறிக்கையும் மதிப்பீட்டுக்காக துறையிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

சான்றளிக்கப்பட்ட, சரியான முறையில் குறியிடப்பட்ட தயாரிப்புகளை சட்டத்தின் (தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்களை செயல்படுத்தும்) பகுதி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றம் அல்லது குடிமை தண்ட ஏற்பாடுகளை மீறாமல் இறக்குமதி செய்யலாம் அல்லது வழங்கலாம். சான்றளிக்கப்படாத தயாரிப்புகளை இறக்குமதி செய்வது, அல்லது தயாரிப்பது மற்றும் வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய சான்றளிப்பு அல்லது அங்கீகரிக்கப்பட்ட அந்நிய ஒழுங்குமுறை ஆணையங்களில் ஒன்றிடமிருந்து சான்றளிப்பைப் பெற்ற தயாரிப்புகளுக்கு ஒரு அடையாளப்படுத்தும் சான்றளிப்பு எண் இருக்கும். தயாரிப்புகளை இறக்குமதி செய்யும்போது இவற்றைக் கொடுக்க வேண்டும்.

# செயல்முறை

ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கான விண்ணப்பங்கள் இரு வழிமுறைகளில் ஒரு வழியில் மதிப்பிடப்படும். சர்வதேச ஆய்வக சான்றளிப்பு ஒத்துழைப்பி (International Laboratory Accreditation Cooperation (ILAC))-னால் சோதனை செய்யப்பட்ட பின்னர் சான்றளிப்புக்கான ஒப்புதலை அளிப்பது ஒரு வழிமுறை மற்றொன்று ILAC-அல்லாத சான்றளிப்பு ஆய்வகத்தினால் சோதனை செய்யப்பட்டு விண்ணப்பிப்பது மற்றொரு முறை.

புகை உமிழ்வுச் சோதனையானது ILAC அல்லாத சான்றளிப்பு ஆய்வகத்தில் செய்யப்படுமானால், ஆஸ்திரேலிய புகை உமிழ்வுச் செந்தரங்களில் (Australian emissions standards) குறிப்பிடப்பட்ட எந்திரம் பரிசோதனை செயல்முறைகளுக்கு உட்பட்டதாக அந்தச் சோதனை அமைந்தது என்பதை நிரூபிக்கும் வகையில் அந்த விண்ணப்பம் இருக்க வேண்டும். இவை, கூட்டாட்சி ஒழுங்குமுறை பாகம் 1065-ன் (Federal Regulations Part 1065) அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை (United States Environmental Protection Agency) குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பரிசோதனைச் செயல்முறைகளுக்கு ஈடானவையாக இருக்க வேண்டும். ILAC சான்றளிப்பு பற்றிய கூடுதல் தகவல் கிடைக்குமிடம்: ilac.org

ஆஸ்திரேலிய செந்தரங்களைப் பூர்த்தி செய்வதாக சோதனை முடிவுகள் மதிப்பிடப்பட்டு சரிபார்க்கப்பட்டதும், அந்த எந்திரத்துக்கும் அந்த குறிப்பிட்ட எந்திரக் குடும்பத்தில் உள்ள பிற எந்திரங்களுக்கும் ஒரு ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பு கொடுக்கப்படுகிறது. எந்திரக் குடும்ப அணுகுமுறையைப் பயன்படுத்துவதால், ஒரு தயாரிப்பாளர் சான்றளிப்பு நோக்கங்களுக்காக ஒரு குறிப்பிட்ட எந்திரத்தை பரிசோதனை செய்து, எந்தவித கூடுதல் பரிசோதனைகளும் இல்லாமலேயே ஒத்த எந்தரங்களுக்கும் அந்தச் சான்றளிப்பை பொருந்துச் செய்ய முடியும். இந்த வழிமுறையில் பரிசோதனை எந்திரத்தைத் தேர்ந்தெடுப்பதில் கடுமையான விதிகள் பின்பற்றப்படுகின்றன.


# 2. ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்தல்

ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கு விண்ணப்பிக்கும் முறையை விதிகளின் பிரிவு 18 தெளிவுபடுத்துகிறது.

துறையின் ஆன்லைன் சர்விசஸ் பிளாட்ஃபார்ம் வழியாக விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.




ஆன்லைன் சேவையைப் பெற அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்ய வேண்டும். நடப்பு பயனர்கள் தங்களுடைய மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி புகுபதிவு செய்யலாம். புகு பதிவு செய்ததும், 'ஒரு கட்டுப்படுத்தப்பட்ட புகை உமிழ்வு தயாரிப்புக்கான சான்றளிப்பு அல்லது விதிவிலக்குக்கு விண்ணப்பித்தல்' ('Apply for an Emissions Controlled Product certification or exemption') என்பதை கிளிக் செய்யுங்கள்.



## விண்ணப்பதாரரிடமிருந்து தேவைப்படும் தகவல்கள்

ஒரு ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கான ஒரு விண்ணப்பம் எழுத்துப்பூர்வமானதாக இருக்க வேண்டும், விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் தகவல்கள் இடம்பெற வேண்டும்:

- விண்ணப்பதாரரின் பெயரும் தொடர்பு விவரங்களும்
- விதிகளின்கீழ் தேவைப்படும் புகை உமிழ்வுப் பரிசோதனை முடிவுகள்
- சட்டத்தின்படி பரிசோதனை நடத்தப்பட்டது என்பதற்கான சான்று உட்பட ஆதரவான ஆவணங்கள்
- கொடுக்கப்பட்ட தகவல்கள் சரியானவை என்பதற்கான ஒரு உறுதிமொழி.

தேவைப்படும் தகவல் விண்ணப்பத்தில் சேர்க்கப்படாவிட்டால் தொடர்பு நபரிடமிருந்து துறை கூடுதல் தகவல்களைக் கோரலாம்.

## விண்ணப்பக் கட்டணங்கள்

ஆஸ்திரேலிய சான்றளிப்புக்காக ஒரு விண்ணப்பத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன, அவை கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

சரியான விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் மட்டுமே துறை ஒரு விண்ணப்பத்தை மதிப்பிடும் வேலையைத் தொடங்கும்.

| சான்றளிப்பு வகை | ஒரு விண்ணப்பத்துக்கான கட்டணம்* |
|---|---|
| சான்றளிப்பு விண்ணப்பம் (ILAC ஆய்வக சோதனை) | $1,330.00 |
| சான்றளிப்பு விண்ணப்பம் (ILAC அல்லாத ஆய்வகச் சோதனை) | $2,850.00 |

*விண்ணப்பக் கட்டணங்களுக்கு GST பொருந்தாது.

## திருப்பிச் செலுத்துதல்

கட்டணத்தைச் செலுத்திய 14 நாட்களுக்குள் விண்ணப்பம் திரும்பப் பெறப்பட்டால், மற்றும் விண்ணப்பத்தைத் துறை மதிப்பிடத் தொடங்காவிட்டால் மட்டுமே விண்ணப்பக் கட்டணத்தைத் திருப்பியளிப்பதற்கு விண்ணப்பதாரர்கள் தகுதி பெறுவார்கள். துறை ஒரு விண்ணப்பத்தைப் பரிசீலித்து, ஆனால் ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பை அளிக்காவிட்டால், கட்டணம் திருப்பிச் செலுத்தப்படாது.

பணத்தைத் திரும்பப் பெறுவதற்கான கோரிக்கைகளை எழுத்து வடிவில் அனுப்ப வேண்டிய துறையின் முகவரி productemissions@awe.gov.au

## விண்ணப்பக் கட்டணத்தைத் தளர்த்துவதற்கான கோரிக்கை

விதிகளின் பிரிவு 44-இன் கீழ், விண்ணப்பதாரர் கோரினால், விதிவிலக்கான சூழல்கள் இருப்பது பற்றி திருப்தியடைந்தால் ஒரு விண்ணப்பக் கட்டணத்தை துறை தளர்த்தலாம். கட்டணத் தளர்வுக்கான கோரிக்கைகளை மின்னஞ்சல் வழியாக சமர்ப்பிக்க வேண்டிய முகவரி: productemissions@awe.gov.au. அனைத்துக் கோரிக்கைகளையும் துறை பரிசீலித்து தன்னுடைய முடிவை எழுத்து வடிவில் விண்ணப்பதாரருக்குக் கொடுக்கும்.

## விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்

ஒரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதும், தொடர்பு நபரின் மின்னஞ்சலுக்கு அதை உறுதிப்படுத்தும் மின்னஞ்சல் அனுப்பப்படும். இணையச் சேவைகளில் லாகின் செய்து எந்த நேரத்திலும் தங்களுடைய விண்ணப்பத்தின் நிலையை விண்ணப்பதாரர்கள் சரிபார்த்துக் கொள்ளலாம்.

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை திருத்த இயலாது. ஒரு தவறான தகவலை உள்ளிட்டதாக அல்லது விண்ணப்பத்துடன் தொடர்புடைய விவரங்கள் மாறிவிட்டதாக அல்லது தவறி விட்டதாக ஒரு விண்ணப்பதாரர் அறிந்தால், மாற்றப்பட வேண்டிய தகவல்களை எழுத்துப்பூர்வமாக துறையிடம் வழங்கலாம். அறிவிப்புகளை productemissions@awe.gov.au-க்கு அனுப்ப வேண்டும். துறை அந்த விண்ணப்பத்தை இற்றைப்படுத்தி அதை எடுத்துக்கொள்ளுவதற்கு முன்னர் விண்ணப்பதாராரிடமிருந்து அந்த மாற்றங்களுக்கு முறைப்படி ஒப்பளிக்கும்படி கேட்கப்படுவார்கள்.

productemissions@awe.gov.au-க்கு எழுதி துறையிடம் தெரிவிப்பதன் மூலம் மதிப்பீட்டின்போது எந்த நேரத்திலும் விண்ணப்பங்களை திரும்ப பெற முடியும். மேலே குறிப்பிட்டுள்ளதுபோன்று கட்டணத்தைச் செலுத்திய 14 நாட்களுக்குள் விண்ணப்பம் திரும்பப் பெறப்பட்டால், மற்றும் விண்ணப்பத்தை துறை மதிப்பிடத் தொடங்காவிட்டால் மட்டுமே விண்ணப்பக் கட்டணம் திருப்பியளிக்கப்படும்.

## ஒரு விண்ணப்பத்தை மதிப்பிடுவதற்கான கால அளவு

கட்டணம் செலுத்தியதை உறுதிசெய்தல் அல்லது கட்டண தளர்வு ஏற்பை உறுதிப்படுத்துதல் உட்பட தேவையான எல்லாத் தகவல்களையும் துறை பெற்று 60 நாட்களுக்குள் தயாரிப்புகளுக்கு சான்றளிக்கப்படாவிட்டால் அல்லது மறுக்கப்படாதிருந்தால், அந்த விண்ணப்பம் மறுக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும் என்று விதிகளின் பிரிவு 21 கூறுகிறது. பெரும்பான்மையான விண்ணப்பங்கள் 60 நாட்களுக்கும் மிக முன்னரே இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# 3. சான்றளிக்கப்பட்டால்

சான்றளிப்புக்கான நிபந்தனைகளை ஒரு விண்ணப்பம் பூர்த்தி செய்வதாக துறை திருப்தியடைந்தால், அதை உறுதிப்படுத்தும் ஒரு ஆஸ்திரேலிய சான்றளிப்பு வழங்கப்படும். அதுபற்றி துறை விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கும், துறையின் வலைதளத்தில் அதுபற்றிய அறிவிப்பு வெளியிடப்படும். ஒரு ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நாளிலிருந்து அச்சான்றிதழ் நடைமுறைக்கு வரும்.

## ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பினை மாற்றுதல், இடைநிறுத்துதல் அல்லது இரத்துசெய்தல்

சில சூழல்களில் ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பினை துறை மாற்றலாம், இடைநிறுத்தலாம் அல்லது இரத்து செய்யலாம்.

விதிகளின் பிரிவு 22 ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பினை மாற்றுவதற்குத் துறைக்கு அனுமதியளிக்கிறது. துறையின் வலைதளத்தில் அறிவிப்பை வெளியிடுவதன் மூலம் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்புக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய நபருக்கு  விவரங்கள் எழுத்து வடிவில் தெரிவிக்கப்படும். அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளன்று அந்த மாற்றம் நடைமுறைக்கு வரும். மாற்றங்கள் பிழைகளைச் சரிசெய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சான்றளிக்கப்பட்ட ஒரு எந்திரக் குடும்பத்தில் கூடுதல் தயாரிப்புகளைச் சேர்ப்பது இதன் நோக்கமல்ல. இந்தச் சூழலில், ஆஸ்திரேலிய சான்றளிப்புக்காக ஒரு புதிய விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வலைதளத்தில் ஒரு அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம் ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பினை இடைநிறுத்த விதிகளின் பிரிவு 23 துறைக்கு அனுமதியளிக்கிறது. உறுதிப்பாட்டுச் சான்றளிப்புக்காகத் தொடர்புகொள்ள வேண்டிய நபருக்கு விவரங்கள் எழுத்து வடிவில் தெரிவிக்கப்படும். உரிய ஆஸ்திரேலிய புகை உமிழ்வுச் செந்தரத்திற்கு எந்த ஒரு சான்றளிக்கப்பட்ட தயாரிப்பாவது உட்படவில்லை என துறை நியாயமான முறையில் சந்தேகித்தால், ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பை இடைநிறுத்தலாம். உதாரணமாக, எந்திர லேபிளில் கொடுக்கப்பட்டுள்ள தகவல் மற்றும் ஒரு குறிப்பிட்ட ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பு வழங்கப்பட்ட எந்திர வகைகளுக்குமிடையே வேறுபாடு இருக்கும்போது இது நடக்கலாம். ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றிதழை இடைநிறுத்துவது சான்றளிப்பின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டிருக்கிறதா என்பதை துறை விசாரிக்க நேரத்தைக் கொடுத்துவுகிறது.

அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளன்று அந்த இடைநிறுத்தம் நடைமுறைக்கு வரும். துறையின் வலைதளத்தில் இரண்டாவது அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம் ஒரு இடைநிறுத்தம் முடிக்கப்படும். இரண்டாவது அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நாளிலிருந்து இது நடைமுறைக்கு வரும். ஒரு இடைநிறுத்தம் நடைமுறையில் இருக்கும்போது, ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பு வழங்கப்பட்ட பொருட்களை இறக்குமதி செய்வதும் வழங்குவதும் நிறுத்தப்பட வேண்டும். இந்தத் தயாரிப்புகளை தொடர்ந்து இறக்குமதி செய்வது (அல்லது தயாரிப்பதும் வழங்குவதும்) அல்லது வழங்குதல் (1 ஜூலை 2020 க்குப் பிறகு) சட்டத்தின் பகுதி 3 இன் கீழ் (தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்களை நடைமுறைப்படுத்துதல்) அல்லது பகுதி 4 (பதிவேடு பராமரிப்பு)-இன்கீழ் ஒரு குற்றமாகும்.

இடைநிறுத்தம் செய்யப்பட்ட பொருட்கள் ஆஸ்திரேலிய புகை உமிழ்வுச் செந்தரத்திற்கு கட்டுப்பட்டுள்ளன என்பது பற்றி துறை திருப்தியடைந்தால் மட்டுமே இடைநிறுத்தம் முடிவடையும்.

வலைதளத்தில் ஒரு அறிவிக்கையை வெளியிடுவதன் மூலம் ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பினை இரத்து செய்ய விதிகளின் பிரிவு 24 துறைக்கு அனுமதியளிக்கிறது. ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பை இரத்துசெய்வதற்கு எந்த ஒரு சான்றளிக்கப்பட்ட தயாரிப்பும் ஆஸ்திரேலிய புகை உமிழ்வுச் செந்தரத்தைப் பூர்த்தி செய்யவில்லை என துறை நியாயமான முறையில் திருப்தியடைய வேண்டும்.

# 4. சான்றிளிப்பு வழங்கப்படாவிட்டால்

ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கான நிபந்தனைகளை ஒரு விண்ணப்பம் பூர்த்தி செய்வதாக துறை திருப்தியடையாதிருந்தால், அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்படும். அதுபற்றி துறை விண்ணப்பதாரருக்கு எழுத்து வடிவில் தெரிவிக்கும்.

## ஒரு முடிவின்மீது மேல்முறையீடு

துறையின் முடிவிற்கு இணங்காத நபர்கள் நிர்வாக மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (Administrative Appeals Tribunal) சீராய்வைக் கோரலாம். ஆஸ்திரேலிய சான்றளிப்பு விண்ணப்பங்கள் தொடர்பான கீழ்க்காணும் முடிவுகள் நிர்வாக மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தினால் (Administrative Appeals Tribunal) சீராய்வு செய்யப்படலாம்:

- ஒரு கட்டண தளர்வு கோரிக்கையை மறுக்கும் ஒரு முடிவு
- ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கான ஒரு விண்ணப்பத்தை நிராகரிக்கும் ஒரு முடிவு
- ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பில் வேறுபடுத்துதல், இடைநிறுத்துதல், இடைநிறுத்தலை முடிக்காதிருப்பது அல்லது திரும்பப் பெறுதலுக்கான ஒரு முடிவு.

கூடுதல் தகவல்களை www.aat.gov.au-ல் பார்க்கலாம்.

# 5. துறையின் பங்கு

சட்டத்தையும், சட்டத்தின்கீழ் உள்ள எந்த ஒரு தயாரிப்பு புகை உமிழ்வுச் செந்தரங்களையும் துறை நிர்வகிக்கிறது. சட்டத்தின் பிரிவு 10 ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கான விதிகளை ஏற்படுத்த அமைச்சரை அனுமதிக்கிறது. சட்டத்தின்கீழ் தயாரிப்புகள் மற்றும்/அல்லது நபர்களுக்கான ஆஸ்திரேலிய சான்றளிப்பினை துறை அளிக்கும் சூழல்களை விதிகளின் பகுதி 4 தெளிவுபடுத்துகிறது.

பின்வருவனவற்றிற்குத் துறை பொறுப்பு:

- விண்ணப்பதாரர்கள் அல்லது சாத்தியமான விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் விசாரணைகளுக்குப் பதிலளித்தல்
- விண்ணப்பதாரரினால் சரியான கட்டணம் செலுத்தியுள்ளதை உறுதிசெய்தல்
- ஒவ்வொரு விண்ணப்பத்திலும் எல்லாத் தேவையான தகவல்களும் உள்ளனவா எனச் சரி பார்த்தல்
- ஒரு விண்ணப்பத்திற்கு ஆஸ்திரேலிய உறுதிப்பாட்டுச் சான்றளிப்பினை வழங்க வேண்டுமா என மதிப்பிடுதலும் தீர்மானித்தலும்
- விண்ணப்பதாரருக்கு அவருடைய விண்ணப்பத்தின் முன்னேற்றம் பற்றித் தெரிவித்தல்
- ஒரு விண்ணப்பம் ஏற்கப்படும்போது, ஒரு உறுதிப்பாட்டு சான்றிதழை அளிப்பது
- சான்றளிப்பு நிராகரிக்கப்பட்டால், அதுபற்றியும் அதற்கான காரணங்களையும் விண்ணப்பதாரருக்குத் தெரிவித்தல்
- சட்டத்திற்கு இணங்கி நடப்பதை உறுதி செய்தல்.

# 6. அதிகமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமா?

தயாரிப்பு உமிழ்வுச் செந்தரங்கள் பற்றி அல்லது ஆஸ்திரேலிய சான்றளிப்புக்கு விண்ணப்பிப்பது எப்படி என்பது பற்றி உங்களுக்கு ஏதும் கேள்விகள் இருந்தால், துறையைத் தொடர்பு கொள்ளுங்கள்:

- மின்னஞ்சல் productemissions@awe.gov.au
- தொலைபேசி 1800 803 772

ENV309.0420